## குச்சவெளி பிரதேச சபை

## திருகோணமலை மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 யூன் 26 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை 2020 ஒக்தோபர் 05 மற்றும் 2020 ஒக்தோபர் 15 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான குச்சவெளி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையொன்றினையும் வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட முத்திரைத் தீர்வை, விளம்பரக் கட்டணம் மற்றும் ஏனைய படிவங்களின் விற்பனை வருமானங்கள் ரூபா 4,922,681 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | சரியான தொகையை கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செம்மையாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ii) | சனசமூக நிலையம் ஒன்றின் முற்பண நிலுவை ரூபா 163,569 தொகை 2018 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்யப்பட்டபோதிலும், அத் தொகை கணக்குகளில் கழித்துக் காட்டப்படவில்லை. | சரியான தொகையை கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டில் பாலங்கள், வீதிகள் அமைப்பதற்காக ரூபா 10,016,576 செலவிடப்பட்ட போதிலும், கணக்குகளில் ரூபா 19,333,741 குறித்த வேலையைச் செய்யப்பட்டுள்ளதென காட்டப்பட்டதினால் ரூபா 9,317,165 ஆல் செலவுகள் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | செலவு செய்யப்பட்ட தொகையை கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கறுத்து தெறுவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 8,255,431 பெறுமதியான வீதி விளக்குகள் மூலதனச் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளதனால் நிலையான சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | வீதி விளக்குகள் நுகர்வுப் பொருட்களாக காணப்படுவதனால் நிலையான சொத்தின் கீழ் காட்டப்பட வேண்டியதில்லை | வீதி விளக்குகள் ஒரு வருடத்துக்கு மேல் பாவிக்கப்படுவதால் Warranty எடுத்ததாலும் மூலதன சொத்தாக கணக்கிடப்பட்டுள்ளது. |
| (v) | சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2019 திசெம்பர் மாதத்துக்கான வங்கிக்கணக்குக் கூற்றில் வங்கிக் கனக்கில் ரூபா 1,322,506 காசு குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் அது மேலதிகமாக வங்கியிள் வைப்பிலிடப்பட்டதாக கூரிப்பிடப்பட்டு காசு புத்தக மீதியிள் அத்தொகை கலித்து வங்கிகணக்கு கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பில் முறையான விசாரணையொன்றினை மேற்கொண்டு, வங்கிக் கணக்கில் பணம் குறைவடைந்தமைக்கான காரணங்கள் மற்றும் அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு, குறித்த பணத்தை வங்கிக் கணக்கிற்கு பெற்றுக்கொள்வதற்கு மற்றும் உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். | வங்கிக் கணக்கிணங்கக் கூற்றில் 2013ம் ஆண்டில் இருந்து 2019ம் ஆண்டு வரை வங்கியில் மேலதிகமாக வைப்பிலிடப்பட்டது என்று கூறப்பட்டு வருகின்றது. |

## (ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### (i) பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல்வேறுபட்ட ஆதன உரிமையாளர்கள் மற்றும் நபர்களிடமிருந்து பெறவேண்டிய 07 வகையான வருமானங்கள் ரூபா 3,275,058 நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக 10 வருடங்களுக்கு மேலாக ஆவணங்கள், பதிவேடு மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவுமின்றி கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைகள் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதால் பதிவழிக்கப்படவில்லை. |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நான்கு வகையாக பெறப்பட்ட மீளளிக்கத்தக்கதான வைப்புக்களில் காலப்பகுப்பாய்வின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 22,131,840 காணப்படுகின்ற போதிலும், அவை தொடர்பில் அவற்றை மீளச்செலுத்த அல்லது அவற்றை உரிய கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைய வருமானத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். | நீண்ட கால வைப்புக்கள் சம்பந்தமாக உரியவர்களிடம் பதில் கிடைக்காத படியால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் சில்லறைக் கடன்கொடுத்தோர் மீதியானது 2015 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலங்களில் ரூபா 693,571 காணப்பட்ட போதிலும், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் தீர்மானத்துடன் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கடன் கொடுத்தோர் மீதி சரியாக உள்ளதென ஆராய முடியாமையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**(இ) ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அவசியமான தகவல்வகன் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் கூட்டு மொத்தம் ரூபா 321,115,645 தொகையான 07 கணக்கிட்டு உருப்படிகள் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் வகைப்படுத்தப்பட்டு காட்டப்பட்ட உருப்படியைக்கூறும் சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்து பதிவேடு பேணப்படுகின்றது |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக, உள்நாட் | விடுமுறை நாள் கொடுப்பனவிற்கு விரலடையாளப் பதிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் | உள்@ர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் நிமித்தம் கிராம |

| | | | |
|---|---|---|---|
| டலுவல்கள் அமைச்சின் நிர்வாக சுற்றறிக்கை 09/2009 இன் 02 (iv) பிரிவு | இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், சபையின் செயலாளர் மற்றும் ஊழியர்கள் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை நேரப்பதிவினை விடுமுறை தினங்களில் பூர்த்தி செய்யாத நிலையில் சபையினால் விடுமுறை மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு ரூபா 86,633 செய்யப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தித் திட்டம், உள்@ர் மன்றங்களுக்கான மக்கள் பங்களிப்புடன் அபிவிருத்தித் திட்டம் ஆகியன தயாரிக்க வேண்டியிருந்தது. இந்த வேலைகள் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் வட்டார உறுப்பினர்கள் பங்குபற்றுதலுடன் நடைபெற்றன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 9,871,627 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 30,807,863 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| ஆதனவரி | 17,287 | 19,509 | 9,719 | 9,790 | 10,603 | 18,867 | 11,669 | 7,198 |
| வாடகை | 20,057 | 11,833 | 2,995 | 8,838 | 6,358 | 8,596 | 4,480 | 4,116 |
| ஏனையவை | 30,145 | 31,061 | 30,145 | 916 | 5,163 | 5,622 | 5,164 | 458 |
| மொத்தம் | 67,486 | 62,403 | 42,859 | 19,544 | 22,124 | 33,085 | 21,313 | 11,772 |

**2.2.2 வீதவரி மற்றும் வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குச்சவெளி உப அலுவலகத்தின் கீழ் அசைவற்ற ஆதனங்கள் கணிப்பிடப்பட்டு ஆதன வரிகளை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | குச்சவெளி உப அலுவலகத்தின் கீழ் உள்ள அசைவற்ற ஆதன வரிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபை தீர்மானம் எடுத்து அதனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | நிலாவெளி உப அலுவலக பிரிவில் ஆதனவரியானது 30 வருடங்களுக்கு முன்பு விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டும், குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆதனவரி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு வரிகள் அறவிடப்படல் மற்றும் ஆண்டுப் பொறுமனத்தில் ஆதனங்களுக்கான வரி வீதங்கள் மாற்றம் செய்யப்படாததினால் உச்சபட்ச ஆதன வரிகளை அறவிடமுடியாதிருந்தது. | மீள்மதிப்பீடு செய்து வரிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதனை மதிப்பீட்டு திணைக்களத்துக்கு அறிவித்து மீள மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்படுகின்றது. |

**2.2.3 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 மாட்டிறைச்சி கடைகளின் ரூபா 1,397,365 நிலுவைத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாடகை நிலுவையானது அறவிட நடவடிக்கை மேற்கொண்டு தற்போது நிலுவையாக ரூபா 871,399 காணப்பட்டுள்ளது. |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

#### 2.2.4.1 உல்லாச விடுதிகளின் வருமானம் மீதான தீர்வை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 149 ஆம் பிரிவுக்கமைய உல்லாச விடுதிகள் பெற்ற வருமானத்தில் 1% சதவீதத்திற்கு மேற்படாத தீர்வையாக அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வு மாதிரி பரிசோதனையின் போது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் இறுதிவரையான காலப்பகுதியில் சபையின் அதிகார எல்லைக்குள் ஹோட்டல்கள் மீதான தீர்வை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபை உல்லாச விடுதிகளினதும் வரிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உல்லாச விடுதி சம்பந்தமாக 2019ம் ஆண்டு சில விடுதிகளில் வருமானம் அறவிடப்படுகின்றது. |

#### 2.2.4.2 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகார எல்லைக்குள் 15 இற்கும் அதிகமான தொலைத் தொடர்பு இணைப்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இக் கோபுரங்கள் அமைப்பதற்கான தொலைத்தொடர்பு கோபுர அமைப்பு அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் வழங்கல், பூர்வாங்க திட்டமிடலுக்கு அனுமதி கொடுத்தல், இசைவுச் சான்றிதல் வழங்குதல் மற்றும் மேவுதல் அங்கீகாரம் என்பன பிரதேச சபையினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொலைத்தொடர்பு இணைப்பு கோபுரங்களின் வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானப் பரிசோதகர்கள் மூலம் இவ் விபரங்களை திரட்ட நடவடிக கணக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

#### 2.2.4.3 வங்கி வட்டி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அறவிடப்படவேண்டிய வங்கி வட்டியாக ரூபா 458,318 காட்டப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வட்டியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வங்கி வட்டி சம்பந்தமாக வங்கிடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.5 முத்திரைத் தீர்வை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்காக கிடைக்கப் பெறவேண்டிய முத்திரைத் தீர்வை ரூபா 35,482,126 தொகையை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைத் தீர்வையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முத்திரைத் தீர்வை கிழக்கு மாகாண சபையினால் அறவிடப்பட்டு அனுப்பப்படுகின்றது. |

**2.2.6 நீதிமன்ற தண்டப்பணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 யூன் மாதம் தொடக்கம் 2019 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,838,647 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடிதம் அனுப்பி வைக்கப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள்மற்றும் பொது வழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ)செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்த செயற்திட்டம் பாதீட்டு ஊடாக தயாரிக்கப்பட்டுள்ளது. |

உப விதிகள் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சபையினால் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டிய போதிலும், அச்செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் கீழ் சேகரிக்கப்படும் குப்பைகள் உக்கலடையும் மற்றும் உக்கலடையாதவையாக தரம் பிரிக்கப்பட்டு உக்கலடையாத குப்பைகள் மீள் சுழற்சிக்கு உட்படுத்துவது உக்கலடையும் கழிவுப் பொருட்கள் சேதனைப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்துவது தொடர்பில் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | பசளைகளை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திண்மக்கழிவு முகாமைத்துவம் ஒரு நிகழ்ச்சித்திட்டமாக கொண்டுவரவில்லை எதிர்காலத்தில் பிறிதாக கொண்டு வரப்படும். தற்போது பொது சுகாதார சேவை நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கப்பட்டு உள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதிகள் புரனமைப்பு செய்வதற்காக 16 ஒப்பந்தங்கள் சனசமூக நிலையங்களுடன் செய்யப்பட்டு தலா ரூபா 200,000 தொடக்கம் ரூபா 700,000 வீச்சில் முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட வேலைகளில் 08 வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. | வேலைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வேலைகள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதியிலிருந்து 05 சாரதிகள், 03 நூலக உதவியாளர்கள் மற்றும் 61 வேலை மற்றும் சுகாதார தொழிலாளர்கள் அமைய மற்றும் பதிலீட்டு அடிப்படையில் | உரிய பதவியணியினர்களுக்கான அனுமதியைப் பெற்று அதற்கு ஏற்ற | நாளாந்த கடமைகள் யாவும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களாலும் பொது சுகாதார |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் பொருட்டு நியமிக்கப்பட்டு அண்ணளவாக மாதம் ரூபா 19 லட்சம் செலவிடப்படுகின்ற போதிலும் எவ்வகையான பணிகளை செய்கின்றனர், இவர்களுக்கான நாளாந்த கடமைகள் யாரால் வழங்கப்படுகின்றன, இவர்களால் நிறைவேற்றப்பட்ட பணிகள் யாரால் உறுதிப்படுத்தப்படுகின்றது போன்ற தகவல்கள் முழுமையாக கணக்காய்வுக்கு பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | மாதிரி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேவை உத்தியோகத்தராலும் வழங்கப்படுகின்றது. |

**(ஆ) ஊழியர் கடன்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் பணியாற்றிய 11 ஊழியர்கள் மரணம், விலகல் மற்றும் வேலை முடிவுறுத்தல்கள் போன்ற கராணங்களினால் ஏற்பட்ட கடன் நிலுவைகள் ரூபா 264,403 தொடர்பில் அவற்றை அவர்களிடமிருந்து அல்லது அவர்களது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன் நிலுவைகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

**(அ) ஆதனங்களினை குத்தகைக்கு வழங்குவதிலுள்ள குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் எவ்வகையான ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படாது பத்துக் கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. | ஒப்பந்தம் செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடைகள் குத்தகைக்கு வழங்க கோரியும் யாரும் வராததால் வாடகைக்கு விடப்பட்டது. |
| (ii) | நிலுவைக் குத்தகையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை உரிய முறையில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை குத்தகைகாரர்கள் நிதியாண்டில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) காணி விற்பனைத் தீர்வை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கான காணிகள் விற்பனை தீர்வைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | காணி விற்பனைத் தீர்வைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி விற்பனை தீர்வு இயங்காமையினால் நிதி ஆண்டில் அறவிடப்பட்டு உள்ளது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2020 யூலை 14 ஆம் திகதி வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த கணிப்பைச் உரிய திகதியில் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்த கணிப்பு Covid - 19 நோயினால் கால தாமதம் ஏற்பட்டு உள்ளது. |
| (ஆ) | பொருள் மெய்மையாய்வின் போது கணிப்பீட்டு சபையினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அவதானிப்புக்கள் தொடர்பாக 05 ஆண்டுகளுக்கு மேலாக சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இருப்பு கணிப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் வருடாந்த பொருள் இருப்பு கணிப்பீடு செய்யப்பட்ட போது வருடாந்த பொருள் மெய்மையாய்வுக் குழுவினால் இருப்புக் கணக்கெடுப்பின் போது சமர்ப்பிக்கப்படாத 639 பொருட்கள் மற்றும் புத்தகங்களில் பதிவு செய்யப்படாது மேலதிகமாக காணப்பட்ட 76 பொருட்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இருப்பு கணிப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**கணனி, அச்சிடல் பொறி, ஒளி, ஒலி சாதனம் கொள்வனவு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கிழக்கு மாகாண திறைசேறி சுற்றுநிருபம் 2017/PT/02/02 இன்படி பிரதேச சபை பெறுகை குழுவினால் (DIPE) ரூபா 500,000 ற்கு உட்பட்ட தொகை ஒன்றிற்கான பெறுகை நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். எனினும் இப் பிரதேச சபை 4.5 மில்லியன் பெறுமதியான பெறுகை நடவடிக்கையை கையாண்டு இருந்தது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொருட்கள் தேவைக்கேற்ப கட்டங்கட்டமாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | அவசரத் தேவையின் நிமித்தம் கொள்வனவு செய்யப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் இப் பொருட்களில் 2 கணினிகள் உள்ளிட்ட சில பொருட்களைத் தவிர ஏனைய பொருட்கள் சாதனங்கள் ஒரு வருட காலமாக பயன்படுத்தப்படாத நிலையிலேயே காணப்பட்டன. | சபையின் நிதியை உரிய முறையில் பயன்படுத்தி பயன்பாட்டைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புல்மோட்டை பொது நூலகத்தில் நூலகத்தின் சேவையை மேம்படுத்த ஏதுவாக E-தர நூலகத்திற்கு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு அதனை உரிய முறையில் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |
| (iii) | கணினி உள்ளிட்ட தொழினுட்ப சாதனங்களை கொள்வனவு செய்யும் பொழுது சபையின் கொள்வனவு கட்டளையின் மீது மாவட்ட செயலக ICT உத்தியோகத்தர் தனது கையொப்பத்தை இட்டு ஒரு ஒப்புதலை வழங்கும் வெறும் ஒத்திசைவாகவே காணப்பட்டது. | கணினி சம்பந்தமான பொருட்களை கொள்வனவு செய்யும் முன்பு பொருத்தமான முறையில் தொழில்நுட்ப ஆலோசனைகளை பெறும் நடைமுறை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவருங் காலங்களில் தங்களின் ஆலோசனை அறிவுரைக்கமைய செயற்படுத்தலாம். |
| (iv) | பிரதேச சபை ஊழியர்கள் STC ஊியர்களின் உதவியுடன் நியாயமான விலைக்கு மேலதிகமான விலையில் கொள்வனவுகளை மேற்கொண்டதன் காரணமாக 232 பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவின் போது சபைக்கு ரூபா 2,366,772 நட்டம் ஏற்பட்டிருந்தது. | ஏற்பட்ட நட்டத்திற்கு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எமது சபையானது சட்டத்திற்கு அமைவாக STC இல் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவுக் கட்டளையை STC க்கு மாத்திரமே வழங்கியதை தவிர வேறு எந்த விநியோகத்தர்களுக்கும் கொள்வனவுக் கட்டளை வழங்கப்படவில்லை. கொடுப்பனவு STC க்கு மாத்திரமே வழங்கப்பட்டது. |

## 4. பெறுகை

### 4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவருங் காலங்களில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆளணிப் பற்றாக்குறையே இதற்கான காரணமாகும். |

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | சுற்று நிருபத்திற்கு இணங்க கூட்டம் கூட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது உரிய குழுக்கள் நியமிக்கப்பட்டு கூட்டங்கள் நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |